# தமிழகத்தில் தொடர்ந்து ரயில், பஸ்கள் தீக்கிரை; மாநிலப் போக்குவரத்து ஸ்தம்பிதநிலை!

தமிழகத்தில் நேற்றும் நேற்று முன் தினமிரவும் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இராமநாதபுரம், சேலம், மதுரை, சிதம்பரம், திண்டுக்கல் பகுதிகளில் பல லொறிகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. மதுரை, சேலம், திருநெல்வேலிப்பகுதிகளில் பஸ் வண்டிகள் தீக்கிரையாக்கப் பட்டதைத் தொடர்ந்து போக்குவரத்துச் சேவை பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது. சேவையிலீடுபடும் ஒரு சில பஸ் வண்டிகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது இதே சமயம் மதுரையில் பதற்ற நிலை அதிகரித்து வருவதையடுத்து அங்கு மத்திய ரிசேவ் பொலிஸின் இருபிரிவுகள் விரைகின்றன. இதனிடையே ரயில் பாதைகள் சில பகுதிகளில் சேதமாக்கப்பட்டுள்ளதால் சில ரயில் சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. செங்கை அண்ணா மாவட்டம் உசிலம்பட்டிப் பகுதிகளில் ரயில் சேவை துண்டிக்கப் பட்டது. திருச்சி விழுப்புரம் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு    விலை ரூபா:- 4-50

முரசொலி

முரசு 05    ஒலி 67    பிரமோதூத    தை 20    02-02-1991    சனி

சட்டசபைக் கலைப்பின் எதிரொலி:

# தமிழகம் மீண்டும் தனிநாடு கோரும்?

## இந்தியப் பத்திரிகைகள் கருத்து

தக்க காரணம் எதுவுமின்றித் தமிழக அரசு கலைக்கப்பட்டமை மீண்டும் தமிழ்நாட்டில் 'திராவிட நாடு' எனும் பிரிவினைப் போராட்டத்தை ஆரம்பிக்க வழிவகுக்கலாம் என இந்திய தேசியப் பத்திரிகைகள் கருத்து வெளியிட்டுள்ளன.

...மின்றித் திடீரெனக் கலைப்பது அம்மாநில மக்கள் மத்திய அரசு மீது நம்பிக்கை இழக்கச் செய்துவிடும்; மத்திய ஆட்சியில் இருந்து பிரிந்து செல்ல போராட்டம் நடாத்தும்மனப்பான்மையை அம்மக்கள் ...ல் வளர்த்துவிடும்.

இதைத்தான் பிரதமர் சந்திரசேகர் செய்து முடித்துள்ளார் என 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' பத்திரிகை தெரிவித்துள்ளது.

தி.மு.க.வின் ஆரம்பகர்த்தாவான அறிஞர் அண்ணாத்துரை 'திராவிட நாடு' என்ற தனிநாட்டுக் கொள்கையை நேருவின் ஆட்சிக் காலத்திலேயே வெளியிட்டார் எனச் சுட்டிக்காட்டியுள்ள 'இந்தியன் எக்கனோமிக் ரைம்ஸ்' பத்திரிகை, இன்று தி.மு.க ஆதரவாளர்களால் அதே கோட்பாடு மீண்டும் முன்வைக்கப்படலாம் அது ஆயுதப்போராட்டமாகவும் மாறலாம் —04 ஆம் பக்கம் பார்க்க

கருணாநிதி 'தமிழோசைக்கு' பேட்டி

## இன்று 'அவர்கள்' வெற்றி பெறலாம் நாளை யாருக்கு என்பதை மக்கள் தீர்மானிக்கட்டும்

...தமிழக அரசை கலைக்கும் முயற்சியில் இந்திரா காங்கிரஸ் கட்சியினரும், அ.தி.மு.க வினரும் வெற்றிபெற்றிருக்கலாம். ஆனால் நாளை யாருக்கு வெற்றி என்பதை தமிழக மக்கள் தீர்மானிப்பர்''

இவ்வாறு தமிழக முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதி நேற்றிரவு பி.பி.ஸி தமிழோசைக்கு வழங்கிய பேட்டியின் போது குறிப்பிட்டார்.

''தமிழக அரசை கலைக்க மத்திய அரசு கூறிய காரணம் தமிழ் நாட்டில் விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தினால் சட்டம் ஒழுங்கு குலைந்து விட்டது. இதைத் தடுக்க முடியாமல் தமிழக அரசு இருக்கிறது என்பதாகும்.

ஆந்திராவில் காங்கிரஸ் ஆட்சி நடக்கிறது அங்கு நக்ஸ்ஸலைட் தீவிரவாதிகளினால் சட்டம் ஒழுங்கு குலைந்திருக்கிறது. அதற்காக அம் ...04 ஆம் பக்கம் பார்க்க

## தி.மு.க.ஆட்சிக் கலைப்பு எதிர்த்து நேற்று இருவர் தற்கொலை!

தமிழகத்தில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து நேற்று ஒருவர் தீக்குளித்து மரணமாகியுள்ளார். திருச்சியில் இச்சம்பவம் நடைபெற்றுள்ளது. இங்கு மற்றுமோருவர் தீக்குளிக்க முயன்று எரிகாயங்களுடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

இதே சமயம் நீலகிரி மாவட்டத்தில் இளைஞர் ஒருவர் ஓடிக்கொண்டிருந்த புல்டோஸர் ஒன்றின் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

## கட்டுத்துவக்கு வெடி ஒருவர் காயம்

குரங்குக்கு வைத்த கட்டுத்துவக்கு தவறுதலாக வெடித்ததால் பி. முத்துராசா (30) என்பவர் படுகாயமடைந்த சம்பவம் பளையில்இடம்பெற்றது.

கட்டுத்துவக்கு வெடித்து கடந்த ஒரு மாதத்தில் பத்துப் பேர் வரை காயமடைந்ததாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (71, ப11, 33

## வெல்லாவெளியில் கண்ணிவெடி 8 படையினர் காயம்; வாகனம் சேதம்

மட்டக்களப்பு மாவட்டம் வெல்லாவெளிப்பகுதியில் இராணுவத்தினரின் வாகனம் ஒன்றின் மீது விடுதலைப்புலிகள் கண்ணிவெடித்தாக்குதலை மேற்கொண்டனர்.

நேற்று முன்தினம் மாலை மூன்று மணியளவில் வெல்லாவெளி இராணுவ முகாமில் இருந்து ட்ரக் வண்டி ஒன்றில் இராணுவத்தினரும், பொலிஸாரும், ரெலோ குழுவினருமாக சுமார் இருபது பேர் ரோந்து நடவடிக்கை மேற்கொண்டு வெளியேறி வந்தனர்.

இவர்களது வாகனத்தை முகாமில் இருந்து முந்நூறு யார் தூரத்தில் வைத்து புலிகள் கண்ணிவெடி மூலம் தாக்கினர். இதனால் வாகனம் சேதமடைந்தது.

இச்சம்பவத்தில் எட்டுப் படையினர் காயமடைந்ததாக பாதுகாப்பு அமைச்சு நேற்று மாலை தெரிவித்தது. (71)

## வவுனியாவில் படையினர் திடீரென துப்பாக்கிச் சூடு

நேற்றுமுன்தினம் வவுனியாவில் சயிக்கிள்களில் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் திடீரெனத் துப்பாக்கிப் பிரயோகம் மேற் கொண்டதால் அங்கு பதற்றம் நிலவியது.

இச் சம்பவத்தையடுத்து இங்கிருந்து கொழும்பு செல்ல வவுனியா சென்றவர்களும் கொழும்பிலிருந்து வந்தவர்களும் திடீரென தமது பயணத்தை இடைநிறுத்தியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. (71, ப 11)

## தென்மராட்சியில் ஹெலிசூடு இருவர் படுகாயமடைந்தனர்

சாவகச்சேரியில் நேற்றுப் பகல் ஹெலிக்கொப்டர் ஒன்று திடீரென பயணிகள் பஸ் மீது சரமாரியாகச் சுட்டது,

இத்தாக்குதல்களினால் பஸ்ஸில் இருந்த செல்லையா தர்மகுலசிங்கம் (36) இடுப்பில் படுகாயமடைந்தார். மேலும் இருவர் சிறு காயமடைந்தனர்

கொடிகாமம் பகுதியில் நேற்று முன்தினம் ஹெலிக்கொப்டர் ஒன்று சன நெரிசல் உள்ள இடத்தினை நோக்கி சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டது.

இதனால் சின்னத்தம்பி யோகராசா (48) என்பவர் இரு காலிலும் பலத்த காயமடைந்தார். (71ப 14, ப 11)

## போதைப் பொருள் கடத்தலுக்கு கொழும்பு கேந்திரம்

சர்வதேச போதைப் பொருள் கடத்தலுக்கு கொழும்பு ஒரு கேந்திர நிலையமாக விளங்குகின்றது என கொழும்புத் திட்டக்கவுன்ஸில் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹெரோயின் கடத்தலில் அண்மையில் கைது செய்யப் பட்டவர்களில் நான்கு நைஜீரியப் பிரஜைகள் அடங்குவர். அவர்களில் ஒருவர் பெண் இவரிடம் 34 கிலோ ஹெரோயின் இருக்கக் காணப்பட்டது

1990 இல் மொத்தம் 54 கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டதாகவும் அதன் சந்தை விலை 1.68 மில்லியன் டொலர் என்றும் அறிவிக்கப் ...04 ஆம் பக்கம் பார்க்க

## 35 ஓய்வூதியக்காரருக்கு ஆரம்பக் கொடுப்பனவு

யாழ் மாவட்டத்தில் இருந்து ஓய்வு பெற்ற 35 பேருக்கான ஆரம்பக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான மூலப்பிரதிகள் யாழ் செயலகத்திற்கு கிடைத்துள்ளன.

கடந்த வருடத்தில் இவ்வாறு மூந்நூறு பேருக்கும் அதிகமானோர் இளைப்பாறியுள்ள போதிலும் இதற்கான கொடுப்பனவுகளை வழங்க மூலப்பிரதிகள் கொழும்பில் இருந்து அனுப்பி வைக்கப் படாதிருக்கின்றன.

இதேவேளை இக்கொடுப் ...04 ஆம் பக்கம் பார்க்க

## தனிச்சிங்களத்திலேயே தொடர்ந்து சுற்றுநிருபங்கள்

வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு அரசினால் அனுப்பப் படும் சுற்று நிருபங்கள், கடிதங்கள் இன்னமும் தனிச்சிங்களத்திலேயே வந்து கொண்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதனால் திணைக்கள அதிகாரிகள் பல சிரமங்களை எதிர்நோக்குவதாகவும்தெரிய வருகிறது.

இதே நேரத்தில் தமிழ் மொழியில் எந்த வித சுற்று நிருபர்களும் வருவதில்லையெனவும் தெரிவிக்கப்படுகிறது. (33, 70)

## ஆங்கில மொழியில் தந்தை செல்வா வரலாறு

தந்தை செல்வாவின் வாழ்க்கை வரலாறு ஆங்கில மொழியில் இவ்வாண்டு மார்ச் மாதம் ஒரே சமயத்தில் லண்டனிலும், நியூயோர்க்கிலும் வெளியிடப்படவுள்ளது. கனடாவில் உள்ள நியூபுறன்ஸ்விக் பல்கலைக் கழக பேராசிரியரும், தந்தை செல்வாவின் மருமகனுமான ஏ. ஜே. வில்சன் இந்நூலை எழுதியுள்ளார். தந்தை செல்வநாயகம் பற்றி ஆங்கிலத்தில் முதல் முதல் எழுதப்பட்ட நூல் இதுவாகும் (33

# இலங்கையில் குடியேறுவதற்கு வெளிநாட்டவர்க்கு அனுமதி!

இலங்கையில் வெளிநாட்டவர்கள் குடியேறுவதற்கு அரசு விசேட திட்டமொன்றின் கீழ் அனுமதி வழங்கவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்படவுள்ளன. 'வேலைவாய்ப்பை முன்னிட்டு குடியேறுபவர்கள்' என்ற விசேட திட்டத்தின் கீழ் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்பவர்களிடமிருந்தும், சிறப்புத் தகைமையுள்ளவர்களிடமிருந்தும் இதற்கான விண்ணப்பங்கள் கோரப்படவுள்ளன.

இவர்களுக்கு முதலில் ஐந்துவருடகாலம் இலங்கையில் தங்குவதற்கு அனுமதி வழங்குவதெனவும் அதன் பின்னர் இலங்கையின் தேசிய அபிவிருத்திக்கு அவர்களாற்றிய பங்களிப்பினைக் கொண்டு பிரஜாவுரிமை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக முதலீடு செய்பவர்கள் முதலீட்டிற்காக 1,50,000 அமெரிக்க டாலர்களும் குடும்ப அங்கத்தவர்களுக்காக 25,000 அமெரிக்க டாலர்களும் வைப்புச் செய்ய வேண்டுமெனவும் அவர்களுடைய முதலீடுகள் கணிசமான வேலை வாய்ப்பை வழங்கக் கூடியதாக இருக்க வேண்டுமெனவும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

மற்றும் இவர்கள் போதியளவு நிதியை வங்கியில் தொடர்ந்தும் பேணிவர வேண்டுமெனவும் கூறப்பட்டுள்ளது. (74)

## சட்டவிரோதமாக இலங்கையில் தங்கிய 32 வெளிநாட்டவர்கள் கைது!

இலங்கையில் சட்ட விரோதமாகத் தங்கிய 32 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர்.

தங்குவதற்காக வழங்கப்பட்ட அனுமதிக்காலத்தை விட மேலதிகமாக சட்டவிரோதமாகத் தங்கியமை, அனுமதியின்றி சட்டவிரோதமாக தொழில் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மேல் சுமத்தப்பட்டுள்ளன.

கைதானவர்களில் 21 பேர் பங்காளதேசையும், ஐவர் இந்தியாவையும் சேர்ந்தவர்கள் மற்றும் ஜேர்மன், தாய்லாந்து நாடுகளைச் சேர்ந்த இருவரும் கைதானோரில் அடங்குவர்.

இதுவரை 350 வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் நிரந்தரமாகத் தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## புதிய நிர்வாகிகள்

இளவாலை வடக்கு நெல்சாத் மக்கள் படிப்பகத்தின் பொதுக்கூட்டம் படிப்பக மண்டபத்தில் மு. தேவதாசன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பெற்றனர்.

தலைவர்: த. இராசகுலசிங்கம், உபதலைவர்: த. சற்குணராசா, செயலாளர்: வ. இரகுநாதன், பொருளாளர்: நா. வரதலட்சுமணன் மற்றும் பதினொரு நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவாகினர்.

போஷகர்களாக வி. விஜயமோகன், மு. தேவதாசன், கு. புண்ணியலிங்கம் ஆகியோர் தெரிவாகினர்.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

வண்ணார் பண்ணை மேற்குதாமரைவீதியாரதியார் சனசமூக நிலைய புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: செ. கணேசலிங்கம், உபதலைவர்: இ. மகாலிங்கம், செயலாளர்: செ. புஷ்பராசா, உபசெயலாளர்: சு. சோதிலிங்கம், பொருளாளர்:- நா. ஜெயசிங்கம், உபபொருளாளர்:- பொ. சிங்கராசா தெரிவுகள் யாவும் ஏகமனதாக நடைபெற்றன. (74)

## புதுக்குடியிருப்பு குண்டுவீச்சில் இறந்தோர் 27ஆக அதிகரிப்பு

புதுக்குடியிருப்பில் கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சில் இறந்தவர்களின் எண்ணிக்கை 27 ஆக அதிகரித்துள்ளது.

இச்சம்பவத்தில் சுமார் 30 பேர் காயமடைந்துள்ளனர். இறந்தவர்களில் பதினைந்து பேர் திருமலை மாவட்ட அகதிகளாவர்.

இறந்தவர்களில் பலரின் உடல்கள் சிதறிய நிலையில் காணப்பட்டதாகவும், இதனால் பலரை அடையாளம் காணமுடியாது போய் விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வடக்கில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட விமானக் குண்டுவீச்சுச் சம்பவங்களில் இத்தாக்குதலிலேயே மிக அதிகமானோர் கொல்லப்பட்டுள்ளனர். (ப-14)

## பால்மா விநியோகம்

மண்டைதீவில் ஒரு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு யாழ் கத்தோலிக்க மனிதமுன்னேற்றச் சங்கத்தால் பால்மா இலவசமாகவழங்கப்படுகிறது.

இதற்கான ஒழுங்குகளை மண்டைதீவு பேதுருவானவர் ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு நீக்லஸ் குரூஸ் மேற்கொண்டிருந்தார். (ப-12)

## உரத்தில் கலப்படம்

தற்பொழுது விற்பனை செய்யப்படும் அமோனியா உரத்தில் உறியுப்பு கலப்படம் செய்யப்படுவதாக புகார்தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கலப்பட உரம் போடப்பட்ட பயிர்கள் கருகி அழிவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர். (ப-12)

## ஆசிரிய பயிற்சிக்கு 550 பேர்தெரிவு பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை

யாழ் மாவட்டப் பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர் பற்றாக் குறை மேலும் அதிகரிக்கும் வாய்ப்பு இருப்பதாக யாழ் கல்வித் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாடசாலைகளில் தற்பொழுது கல்வி கற்பித்துக் கொண்டிருக்கும் சுமார் 550 ஆசிரியர்கள், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு செல்வதாலேயே இந்நிலை உருவாகியுள்ளதாக அவ் அதிகாரிமேலும் தெரிவித்தார்.

ஏற்கனவே சுமார் 700ஆசிரியர்கள் யாழ் மாவட்டப் பாடசாலைகளில் ஓய்வு பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இதே வேளை ஆசிரியர் பற்றாக் குறையை, தொண்டர் ஆசிரியர் தெரிவு மூலம் ஈடு செய்ய முயன்றாலும் அனுபவம் குறைந்த ஆசிரியர்களே பாடசாலைகளில் அதிகம் காணப்படும் நிலை ஒன்று ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (70 ,74)

## நோயாளி மரணம்

கப்பல் மூலம் கொழும்பு கொண்டு செல்லப்பட்ட கடும் நோயாளி ஒருவர் அங்கு மரணமானதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவரின் சடலம் பருத்தித்துறைக்கு வரும் ''லில்லி லில்லி'' கப்பலில் கொண்டு வரப்படுகிறதெனத் தெரிய வருகிறது.

இந்த நோயாளி கடந்த மாதம் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு கொண்டு செல்லப்பட்டிருந்தார். (ப-11)

## இலங்கைச் சிறுவர்கள் - இங்கு இப்போது என்ன செய்கிறார்கள்?

இலங்கைச் சிறுவர்கள் பற்றி அண்மையில் சர்வதேச நிறுவனமொன்று புள்ளிவிபரக் கணக்கெடுப்பொன்றை நடாத்தியது.

இந்தக் கணக்கெடுப்பில் பல அதிர்ச்சியான தகவல்களும் வெளியாகின.

இலங்கையில் உள்ள சிறுவர்களில் 10,000 பேர் விபச்சாரங்களிலும், ஆபாசத் திரைப்படத் தயாரிப்பிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்ற தகவல் தெரிய வந்துள்ளதாம்.

## நமக்குள் ஓர் உயிர் கொம்ப்யூற்றர்

— கடந்த புதன் தொடர்ச்சி

''இந்தச் செய்தி எங்கே பதித்து வைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பற்றி இன்னும் சரியாகத் தெரியவில்லை. நவீன உயிரியல் விஞ்ஞானத்தால் இன்னும் இதற்கு விடைகாண முடியவில்லை'' என்று பியோதர் கூறினார்.

''இயற்பியல், முப்பரிமாண இயல் ஆகியவற்றின் உதவியைப் பயன்படுத்திக் கொள்ளாமல் உயிரியல் அறையால் இதற்கு ஒருபோதும் விடைகாணமுடியாது'' என்றும் பியோதர் கர்யயேவ் சொன்னார். ''காலத்திலும், வெளியிலும் உயிரினம் உருப்பெறுவதற்குக் காரணமான விதியின் 'மறைந்து கிடக்கும் பகுதிகளைக் கண்டறிந்து விளக்குவதற்கு இந்த விஞ்ஞானப் பிரிவுகளின் சங்கமத்தினால்தான் முடியும்'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர், ''பல்லாண்டுகால ஆய்வுகளுக்குப் பிறகு விசித்திர முரண்பாடுகளுடன் கூடிய ஒரு முடிவுக்கு நாங்கள் வந்திருக்கிறோம். அண்மைக்காலம் வரையில் ஓர் உயிரினத்தின் பரம்பரைக் குணத்துக்குப் பிரதான அம்சமாகக் கருதப்பட்டுவந்த ஜீன்கள் முப்பரிமாணம் கொண்ட சூப்பர் ஜீன்களினுடைய ஒரு மிகச் சிறிய பகுதியே என்பது இப்போது தெரியவந்திருக்கிறது. இவைகள் ஒன்றிணைந்த நிலையில், உயிரினங்களின் உயிர் முப்பரிமாணக் கொம்ப்யூற்றராக அமைகின்றன. தனித்தன்மை வாய்ந்த இந்த அமைப்பு திசுக்களின், உடலுறுப்புகளின் இப்போதைய நிலையைத் தீர்மானிப்பது மட்டுமன்றி, அவற்றின் கடந்த காலத்தைச் சீரமைக்கவும், எதிர்காலத்தை நிர்ணயிக்கவும் செய்கிறது''.

ஏற்கனவே கை கால்கள் துண்டிக்கப்பட்ட பிறகு சிலருக்கு ஏற்படுகிற 'உருவக' வலி அனுபவம் போன்று உயிரினங்களில் காணப்படும் விளக்க முடியாத செயல் நிகழ்வுகளுக்கு இந்த விஞ்ஞானக்கொள்கை எளிய விளக்கம் தருகிறது'' என்று பியோதர் கூறினார்.

'பல ஆண்டுகளுக்கு முன்னால், கல்கத்தாவிலிருந்து இந்திய ஆராய்ச்சியாளர்களான பேராசிரியர் ஜே. கே. சவுத்ரி' டாக்டர் பி. சி. கஜரிவால், ஏ. சட்டோபாத்யாயா ஆகியோர் எழுதிய கட்டுரையில் செயற்கையான மின்காந்தப் புலத்தைக் கொண்டு உருவகத் திறன்களை உருவாக்குவதைப் பற்றி விவரிக்கப்பட்டிருந்தது. அந்தக் கட்டுரை என்னுள் பெரும் ஆர்வத்தைத் தூண்டியது. எனது சொந்த 'உருவகத் திறனைப்' பெறுவதற்கு நான் முயற்சி செய்ய ஆரம்பித்தேன். உடலின் இயல்பான கதிர்வீச்சுக்களை இதற்கு நான் பயன்படுத்தினேன். இந்த ஆய்வுகளின் பயனாகவே, நமக்குள்ளே ஓர் உயிர் கொம்ப்யூற்றர் இருக்கிறது என்ற முடிவுக்கு நான் வந்தேன்.'' என்று பியோதர் விளக்கியுள்ளார்.

அனைத்துஉடலுறுப்புகளின் செயல்பாடுகளையும் இந்தஉயிர் கொம்ப்யூற்றர்தான் நிலையாக சரிசெய்கிறது ஆனால், வெளியுலகமானது புற்றுநோயூக்கிகள், தீங்கு விளைவிக்கும் சாயங்கள், அயனிக்கதிர் வீச்சுக்கள் போன்றவற்றின் மூலமாகத் திடீரெனத் தாக்குதல் தொடுக்கிறது. இது நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்பில் கோளாறையும், கட்டுப்படுத்த முடியாதபடி செல்களின் அமைப்பில் குழப்பத்தையும் ஏற்படுத்துகிறது. இதன் விளைவாகவே புற்றுநோய், எயிட்ஸ் போன்றவை ஏற்படுகின்றன.

''இந்த உயிர் - கொம்ப்யூற்றரை இயக்கக் கற்றுக்கொள்வதன் மூலம், அதில் பதித்து வைக்கப்பட்டுள்ள ஆணைத் தொடரில் தேவையான மாற்றங்களை நம்மால் ஏற்படுத்த முடியும். இதன் மூலம் நோயினால் பாதிக்கப்பட்ட திசுக்களைக் குணப்படுத்தவோ, புதிதாக அந்த திசுக்களை மீண்டு உருவாக்கவோ முடியும். சொல்லப்போனால், அறுந்து போன வாலுக்குப் பதிலாக ஒரு பல்லியால் புதிய வாலை வளர்த்துக் கொள்ள முடியும். இத்தகைய சுயபாதுகாப்பு நிலை நமது ஜீன்களில் இருக்கிறது என்பதும், பரிணாம வளர்ச்சியின் போது இது இழக்கப்பட்டுவிட்டது என்பதும் ஜீன்களின் பழைய கருநினைவாற்றலைத் தூண்டுவதன் மூலம் இந்த நிலையை மீண்டும் நாம் பெறமுடியும் என்பதும் இதற்குப் பொருளாகும் தனிப்பட்ட ஒவ்வொரு உயிரின் உயிரியில் ஆணைத்தொடரிலும் அதன் செயல்பாட்டை நிறுத்தி விடுவதற்கான அமைப்பும் அடங்கியிருக்கிறது. இதுவே மரணம்'' என்று பிரயோதர் கூறினார்.

''இறவாநிலை எய்துவது கொள்கையளவில் சாத்தியம் தான். ஆனால் அது அவ்வளவு எளிதாகத் தோன்றவில்லை'' என்று இளம் விஞ்ஞானியான பியோதர் கூறுகிறார்.

பியோதர் கர்யயேவும் அவரது சகாக்களும் கூறுகின்ற இந்த விஞ்ஞானக் கொள்கை நடைமுறைக்கு வருவதற்கு நெடுங்காலம் ஆகும் என்று தோன்றலாம். ஒருசிலருக்கு இந்தக் கொள்கை சிரிப்புக்கிடமாகக் கூட இருக்கலாம். எனினும் மற்றவர்களுக்கு இது ஆழ்ந்த சிந்தனைக்குரியதாக இருக்கும்.

நன்றி: புதுப்புனல்

## பட்ட. பயிலுநர் ஆசிரிய நியமனம்

(நேற்றைய தொடர்ச்சி)

செல்வி கே. சிறீசுசிகலா யாழ்ப்பாணம், செல்வி எஸ். சேனாதிராசா கைதடி, செல்வி ஏ. சின்னத்துரை மானிப்பாய், செல்வி எஸ். சுமதி யாழ்ப்பாணம், செல்வி ரீ சர்வதயாபிரி காரைநகர், கே. சத்தியசீலன் யாழ்ப்பாணம், செல்வி கே. சுலோசனாதேவி கரவெட்டி, செல்வி எம். தனேஸ்வரி கரவெட்டி, செல்வி எஸ். தக்சாயனி கரவெட்டி, செய்வி ரீ. தயாநிதி காரைநகர், செல்வி யசோதை செல்லையா சுன்னாகம், செல்வி ரீ. தயானந்தி சுன்னாகம், செல்வி ஆர். தயானி யாழ்ப்பாணம், ரீ. தர்மபாலன் வட்டுக்கோட்டை, செல்வி பீ. தவமலர் பருத்தித்துறை.

எஸ். தயாளன் வேலணை, செல்வி எஸ். தனலட்சுமி யாழ்ப்பாணம், செல்வி ரீ. தியாகநந்தி, செல்வி ரீ. உஷாந்தினி கரவெட்டி, செல்வி எஸ். உமா ஆனைக்கோட்டை, எஸ். உதயகுமாரன் கொடிகாமம், சீ. விஷ்ணுகுமார் வட்டுக்கோட்டை செல்வி வீ. வசந்தா கிளிநொச்சி, செல்வி ஏ. விஜ[illegible] தெல்லிப்பழை, செ[illegible] வனஜா கந்தசாமி [illegible]பிட்டி, செல்வி [illegible]

4 ஆம் பக்கம் [illegible]

# கடந்த வருடம் முதல் 8 மாதங்களில் மட்டும்

## 8000 இலங்கைத்தமிழர் சுவிஸில் அரசியல் தஞ்சம்!

சுவிட்ஸிலாந்திற்கு அடைக்கலம் கோரிச் செல்லும் இலங்கைத் தமிழர்களின் தொகை கடந்த சில மாதங்களாக வெகுவாக அதிகரித்துள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த 1984—89 ஆம் ஆண்டு காலப் பகுதியில் 6000 தமிழர்கள் மட்டுமே அடைக்கலம் கோரி அங்கு சென்றிருந்தனர்.

ஆனால் கடந்த வருடம் முதல் எட்டு மாதங்களில் மட்டும் இத்தொகை 14,000 ஆக அதிகரித்துள்ளது.

சுவிட்ஸிலாந்தில் கடந்த ஆகஸ்ட் வரை 48304 அகதிகள் அரசியல் தஞ்சம் கோரி விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் துருக்கி நாட்டவரே அதிகம். அதற்கு அடுத்தபடியாக இலங்கைத் தமிழர்கள் உள்ளனர். இதுதவிர லெபனான், யூகோஸிலாவியா, ருமேனியா நாடுகளைச் சேர்ந்தவர்களும் அடைக்கலம் கோரி தற்போது அங்கு சென்றார்கள்.

அடைக்கலம் கோரி வழங்கப்பட்ட விண்ணப்பங்களில் 6000 மட்டுமே இதுவரை சுவிஸ் அரசால் பரிசீலிக்கப்பட்டுள்ளது. இதில் 250 பேருக்கு மட்டுமே அரசியல் தஞ்ச அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுவிஸ் நாட்டிற்கு அடைக்கலம் கோரி வருவோர் முதலில் முகாம்களில் தங்கவைக்கப் படுகின்றனர். இவர்கள் அவ்வாறு தங்கியிருக்கும் போது அவர்களுக்கு கைச் செலவுக்கும், உணவுக்கும் என குறிப்பிட்ட தொகைப் பணம் வழங்கப்படும். முகாம்களில் 3 முதல் 8 மாதம் வரை தங்கியதன் பின்னரேயே தற்காலிகமாகத் தொழில் செய்வதற்கான அனுமதி வழங்கப்படுகின்றது.

சில மாதங்களுக்கு முன் சுவிஸ் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்ட மனிதாபிமான அடிப்படையிலான சட்டத்திருத்தமொன்றுக்கிணங்க 1984 க்கு முன் சுவிஸ் வராதவர்களுக்கும், 1986 க்கு முன் வந்து குடும்பத்துடன் தங்கியுள்ளவர்களுக்கு நிரந்தர தொழில் பெறுவதற்கான அனுமதி தற்போது வழங்கப் படுகின்றது. இச் சலுகை ஒரு சில தமிழர்களுக்கு மட்டுமே இதுவரை கிடைத்துள்ளது.

தொழில் பெற அனுமதிக்கப் பட்டதன் பின்னர் தமிழர்களில் பெரும்பாலானோர், உணவு விடுதிகளிலும், உல்லாச விடுதிகளிலும், தொழிற்சாலைகளிலும், வியாபர நிலையம் மற்றும் வயோதிப மடங்களிலுமே, தொழில் வாய்ப்பைத் தேடிக் கொள்கின்றனர்.

வயோதிப மடங்களில் பணி புரிவோருக்கு 2800 சுவிஸ் பிராங்குகளும். தொழிற்சாலைகள், வியாபார நிலையங்களில் கடமை புரிவோருக்கு 2000 பிராங்குகளும் மாதச் சம்பளமாக வழங்கப் படுகின்றது. குடும்பங்களுடன் இருப்போருக்கு அதற்கான சலுகைப்பணமும் கிடைக்கும். (74)

# இல. நிலைமை சீரடைந்தால் சுவிஸ் அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர்

இலங்கையில் நிலைமை சீரடைந்தால் தற்போது சுவிஸில் அகதிகளாகத் தங்கியுள்ள இலங்கைத் தமிழர்கள் அனைவரும் திருப்பி அனுப்பப்படுவர்.

சுவிஸ் அரசாங்க வட்டாரங்கள் இத்தகவலைத் தெரிவித்துள்ளன.

சுவிஸ் வந்துள்ள தமிழர்களைச் சுவிஸ் அரசும், அங்குள்ள மக்களும் பொருளாதார அகதிகளாகவே கருதுகின்றனர்.

இலங்கைக்குத் தற்போது அவர்கள் திரும்பிச் சென்று வாழ முடியாதென்பதைச் சுவிஸ் அரசு மனிதாபிமான அடிப்படையில் ஒத்துக் கொள்வதாகவும், ஆனால் நிலைமை சீரானதும் தமிழர்களைத் திருப்பி அனுப்புவது தவிர்க்க முடியாததெனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.


உ

யாழ் இந்து நூற்றாண்டு விழா

வாழ்த்து

ஈரைம்ப தாண்டு காலம் இந்துக்கல்லூரியெனும்
பேர்பெற்று அகில மெங்கும் பெரும்புகழ் ஈட்டி வாழும்
கூர்மதி யுடையோர்க் கெல்லாம் கொடுத்தனை
கல்விச் செல்வம்
ஆர்கலிஉலகம் உள்ளஅளவும்நீ சிறந்து வாழி!

— மு. வைத்தியலிங்கம்
(84 அகவையுடைய பழைய மாணவன்)

நஷனல் அக்கடமி

பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

க. பொ. த. சாதாரணம் (1990)

மாணவர் நலன் கருதி மாதிரிப்பரீட்சை
சகல பாடங்களுக்கும் நடைபெறும்.

12-02-91 இற்கு முன் விண்ணப்பங்கள்
ஏற்றுக்கொள்ளப்படும்

அதிபர்
க. தளையரட்ணம்
02022

யாழ் பல்கலைக்கழகம்
இலங்கை

அன்பான மாணவர்களுக்கு

மகாபொல கொடுப்பனவு

3-ம் தவணைப்பண நிலுவை (தை 1991)
4-ம் தவணைப்பணம் (மாசி 1991)

மேற்படி கொடுப்பனவை பின்வரும் ஒழுங்குமுறையில் பெற்றுக்கொள்ளவும்.

| 1-ம், 2-ம், 3-ம், 4-ம் வருட மாணவர்கள் | கொடுப்பனவுத் திகதியும் நேரமும் |
| --- | --- |
| கலைப்பிரிவு | ★ 1-ம் வருட மாணவர்கள் |
| வர்த்தகப்பிரிவு | ★ 01-02-91 மட்டும். |
| வியாபார நிர்வாகப்பிரிவு | 05-02-91 பி.ப.1.30-3 00 |
| உயிரியல் விஞ்ஞானப்பிரிவு | 06-02-91 பி.ப.1 30-3.00 |
| பௌதிக விஞ்ஞானப்பிரிவு | 07-02-91 பி.ப.1.30-3.00 |
| மருத்துவபீடம் | 08-02-91 பி.ப.1.30-3 00 |

கொடுப்பனவுகள் அனைத்தும் காசாக வழங்கப்படும். எனவே தவறாது மேற்கூறப்பட்ட திகதிகளில் கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளவும்.

கொடுப்பனவின்போது சமர்ப்பிக்கப்பட வேண்டியவை:

01. ரூ. 2/- பெறுமதியான முத்திரை
02. மாணவர் அடையாள அட்டை

02026

பதிவாளர்

சிறு விளம்பரம்

விற்பனைக்கு

வேப்பெண்ணெய் வீட்டில் விளக்கெரிக்கக் கண்ணுக்குக் குளிர்ச்சி—மருந்தாகப் பாவிக்க.போத்தல் ரூபா 80/—மட்டுமே திருநெல்வேலி, இணுவில் யாழ் நவீன சந்தை அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனையாகிறது.மில்க்வைற்.02017

தேவை

கழுவித் துப்புரவு செய்யப்பட்ட முழு/ அரைப் போத்தல்கள் மில்க்வைற் யாழ்ப்பாணம். 02016

சேவை

நல்லூரில் தரமான போட்டோஸ்ரட் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளைப் புகைப்படங்களுக்கும் நாடவேண்டிய ஸ்தாபனம் "சித்திராலயா", இல 351, கோவில் வீதி, நல்லூர். (நல்லூர் கோவில் பின்வீதியில், கம்பன்கோட்டம் முன்பாக). 02025

விற்பனைக்கு

அளவெட்டி மேற்குக் கிராமிய உற்பத்திக் குழுவினரால் சிறந்த இனக் கத்தரி, தக்காளி, மிளகாய், கறிமிளகாய், கோவா, பூக்கோவா, இலைக்கோவா மற்றும் சில விதை வகைகளும் மலிவான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தொடர்பு: மூர்த்தி, குமணன் வீதி, அளவெட்டி தெற்கு. (எரிந்த பேக்கரி முன்பாக).02002

விற்பனைக்கு

அஷ்டலக்ஷ்மி மாதக் கலண்டர் பிரதான கருமங்களை உள்ளடக்கி வெளிவந்து விட்டது. விலை ரூபா 20/- வியாபாரிகளுக்கு 15% கழிவுண்டு. நேரில் வருக. அஷ்டலக்ஷ்மி வெளியீட்டகம், கைதடி. 01010

பரத நாட்டிய வகுப்பு

பரத நாட்டியம் பயில விரும்பும் மாணவிகள் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 9.00 முதல் 11-30 வரை தொடர்பு கொள்ளுங்கள்.

230 நாவலர் வீதி,
(இலுப்பையடி சந்திக்குக் அருகாமை)
யாழ்ப்பாணம்.

02018

புதிய உயர் கல்லூரி

ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம்

A/L 92 இந்து நாகரிகம்
இந்திய வரலாறு (History)
2ஆவது பிரிவு ஆரம்பம்: 03-02-91

A/L 90 வினா - விடை வகுப்பு
ஆரம்பம்: 06-02-91 10மணி

A/L 91 Day Classes
ஆரம்பமாகி நடைபெறுகின்றன

ஆசிரியர் - திருமதி S. அருள்நங்கை

02007

உ



ஸ்ரீ ராம ஜயம்

யாழ்
வடமராட்சி



ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தானம்

மஹோற்சவம்

(1990 புரட்டாதியில் பின் போடப்பட்டது)

| | |
| --- | --- |
| கொடியேற்றம்: | 13. 2. 91 புதன் காலை 11. 00 |
| தேர்: | 27. 2. 91 புதன் காலை 8. 00 |
| சமுத்திரதீர்த்தம்; | 28. 2. 91 வியாழன் மாலை 4,00 |
| கேணித்தீர்த்தம்: | 1. 3. 91 வெள்ளி காலை 11. 00 |

பிரதேசக் கால நிலைக்கேற்ப நேரங்களில் மாற்றம் ஏற்படலாம்.

★ ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் தேவஸ்தான உற்சவங்களுக்கோ திருப்பணிகளுக்கோ நிதி, பொருள்கள் ஆகியவை சேகரிக்க வெளியார் எவரும் நியமிக்கப்படவில்லை அன்பளிப்புக்கள் யாவும் கோவில் களஞ்சியத்தில் செலுத்தப்பட்டு, பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்வது அவசியம்.

02027 தர்மகர்த்தாசபை

…rasolie REGISTERD AS A NEWS PAPER IN SRI LANKA 02-02-1991 சனிக்கிழமை

# சவுதியினுள் ஈராக் படைகள் அமெரிக்கத் துருப்புக்களை 25 யார் தூரத்தில் எதிர் கொண்டு கடும் யுத்தம்

சவுதிஅரேபியாவின் கரையோர நகரான அல்ஹஜிஇல் தொடர்ந்து ஈராக்கிய துருப்புகளுக்கும் அமெரிக்க நேச நாட்டுப் படையணிகளுக்கும் இடையில் கடும் போர் இடம் பெற்று வருகிறது.

நேற்றைய மோதலின்போது இரு தரப்பினரும் சுமார் இருபத்தைந்து யார் தூரத்தில் எதிர்கொண்டு மோதலில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. அமெரிக்கத் தரப்பில் விமானங்களும் படைவீரர்களுக்கு உதவியாக ஈராக்கிய படைகள் மீது தாக்குதல் நடாத்தி வருகின்றன. ஈராக்கிக் கவசவாகனப் படையணியின் உதவியுடன் ஈராக் துருப்புகள் மோதலில் ஈடுபட்டுள்ளன. அமெரிக்க விமானம் ஒன்று தவறுதலாக அமெரிக்க டாங்கி ஒன்றை குண்டு வீசி அழித்ததாகவும் தெரிவிக்கப் படுகிறது.

## செஞ்சிலுவைச் சங்க வேண்டுகோள்

வளைகுடாப்போர் அவலம் குறித்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்க ஜெனீவாத் தலைமைச் செயலகம் முதன்முறையாக அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இதன் தலைவர் கொனேகோ சமறூகோ கையெழுத்திட்ட இவ்வறிக்கையில் போர் வெடித்ததை தொடர்ந்து பல ஈராக்கியரும் குவைத்தியரும் பலியாகியுள்ளனர். இப்பகுதிகளில் உணவிற்கே தட்டுப்பாடு நிலவுகிறது. ஆண்கள் அனைவரும் போர்முனைக்குச் சென்றுவிட்டனர். பெண்களும் குழந்தைகளும் பலவித இன்னல்களிற்கு உட்பட்டுள்ளனர். யுத்த கைதிகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். இந்நிலையை சகல தரப்பும் புரிந்துகொள்ள வேண்டும். மனிதாபிமான பணியில் ஈடுபட்டிருக்கும் செஞ்சிலுவைச்சங்கத்திற்கு உலக மக்கள் உதவியளிக்க முன்வர வேண்டும் எனக்கேட்கப்பட்டுள்ளது.

## ஈராக்மீது குண்டுவீச்சு தொடர்கிறது

நேற்றுக்காலை ஈராக்கிய துறைமுக நகரான பஸ்ரா மற்றும் ஹபுல்காஇம் போன்ற நகரங்கள் மீது அமெரிக்க விமானங்கள் தாக்குதலை நடாத்தின. பிரெஞ்சின் ஜெகுவார் மற்றும் மிராஜ் விமானங்கள் குவைத்தில் தாக்குதலை நடாத்தின. இதுவரை நடந்த போரில் தாம் இதுவரை 25 விமானங்களை இழந்துள்ளதாக அமெரிக்க நேசநாட்டு அணிகள் தெரிவித்துள்ளன.

## 70இலக்குகள் இதுவரை தீவிரவாதிகளால் தாக்கு

நான்காவது முறையாகவும் தெற்கு லெபனானில் இஸ்ரேலியரின் பாதுகாப்பு வலையத்தினுள் பாலஸ்தீன தீவிரவாதிகள் ஏவுகணைத்தாக்குதலை நடாத்தினர். போர் ஆரம்பித்த பின்னர் இதுவரை 70பயங்கரவாத நடவடிக்கைகள் உலகெங்கிலும் உள்ள அமெரிக்க இலக்குகள் மீது நடாத்தப்பட்டுள்ளன. இவற்றினால் பொருள்சேதமே பெருமளவு ஏட்பட்டது.

## சதாம் ஹுசைன் குவைத் விஜயம்

இதேசமயம் 16 அமெரிக்க ராணுவ வீரர்களுடன் சென்ற அமெரிக்க விமானப்படை விமானம் ஒன்று ஈராக்கினால் சுட்டு வீழ்த்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. ஈராக் ஜனாதிபதி ஹுசைன் குவைத்திற்கு சென்றுள்ளதாகவும் அவர் அங்கு தரைப் போரில் ஈடுபடும் தமது படையினரை உற்சாகப்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பிந்திய செய்திகளின்படி ஈராக்கிய துருப்புகள் மேலும் எட்டு கிலோ மீற்றர் தூரம் வரை முன்னேறி மற்றுமோர் சவுதி நகரான உம்துஜோவை அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஈராக்கிய டாங்கிகளும் கவசவாகனங்களும் குவைத்திலிருந்து சவுதி நோக்கி நகர்ந்து வருவதாகவும் தெரியவருகிறது. இவற்றில் மூன்று கவசவாகனங்கள் அமெரிக்க விமானங்களால் தாக்கி அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

## சத்தியேந்திரா ஜெகன் 2-ம் நினைவு

மாணவர்களின் உரிமைக்கான போராட்டத்தில் பங்கு பற்றி இந்திய ராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான பல்கலைக்கழக மாணவர்களான சந்தியேந்திரா, ஜெகநாதன் ஆகியோரின் 2-ம் ஆண்டு நினைவஞ்சலி இன்று காலை பத்துமணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம் பெறும். இதில் அம் மாணவர் நினைவாக சேகரிக்கப்பட்ட நிதி அவர்களின் பெற்றோரிடம் கையளிக்கப் படவுள்ளது.

## பூநகரியில் ஒய்வூதியம்

பூநகரிப் பகுதியில் யூன் மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான ஓய்வூதிய வவுச்சர்களுக்கு பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் தமது கிராமிய வங்கி மூலம் பணம் வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. (33, ப-35)

## கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அப்பியாசக் கொப்பிகள்

மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளை பல. நோ, கூ. சங்கங்கள் மூலம் கொழும்பில் இருந்து பெற்று விநியோகம் செய்ய யாழ் செயலகம்நடவடிக்கை எடுத்து வருகிறது.

கூட்டுறவுச் சங்கங்கள் இவற்றை நேரடியாகக் கொழும்பில் இருந்து கொள்வனவு செய்யுமிடத்து கப்பல் மூலம் அவற்றை இங்கு கொண்டு வந்து சேர்க்க முடியுமென செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (66)

## கிளிநொச்சிக்கு இலவச பாடநூல்கள்

கிளிநொச்சி மாவட்ட பாடசாலைக்களுக்கான இலவசப் புத்தகங்கள் கொழும்பிலிருந்து இவ்வாரத்தில்கொண்டு வரப்படவுள்ளது.

கிளிநொச்சி கல்விப் பணிப்பாளர் திரு. சு. கந்தசாமி இது தொடர்பாக கொழும்பு சென்றுள்ளார். (ப-6)

## பூநகரி வாடியடியில் துர்நாற்றம்

பூநகரி வாடியடி சந்தைப் பகுதி சுகாதார சீர்கேடு நிலவுவதாக பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அதிகமான வடபகுதி பயணிகள் தங்கும் இவ்விடத்தில் போதிய சுகாதார வசதிகள் செய்யப்படாததால் துர்நாற்றம் வீசுகிறது.

இதனால் நோய் பரவும் அபாயம் ஏற்படும் எனவும் சுகாதார வட்டாரங்கள் கூறுகின்றன. (33, ப35, ப11)

## பொலிஸ்பகுதியில் 32பேருக்குப்பதவியுயர்வு அதில் இருவர் மட்டுமே தமிழர்

பொலிஸ் திணைக்களம் 32 உதவிப் பொலிஸ் அதிபர்களைப் பொலிஸ் அதிபர்களாகப் பதவி உயர்த்தியுள்ளது.

இந்த 32 பேரில் பொலிஸ் தலைமையகத்தைச் சேர்ந்த வி. பி. கந்தசாமி, கொழும்பு நகரப் போக்குவரத்துப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த ஈ. அந்தனி ஆகிய இருவர் மட்டுமே தமிழர்கள்.

பொலிஸ் அதிரடிப் பிரிவில் பதவியுயர்த்தப்பட்டவர்களில் தமிழர்கள் எவரும் இடம் பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வெற்று நில விபரம் சேகரிப்பு; பயிர்ச்செய்கைக்குத் துரித ஏற்பாடு

பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படாதுள்ள காணிகளின் விபரங்களை தமிழீழ ஆய்வு நிறுவனம் விவசாய உற்பத்திக்கு மக்களின் மூலம் சேகரித்து வருகின்றது.

பனை, தென்னை, போகப் பயிர், வெற்று நிலம், கோவில் நிலங்கள் போன்ற பல்வேறு பிரிவுகளாக இத்தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. உரிய முறையில் பயன்படுத்தப் படாத இந்நிலங்களில் உணவு உற்பத்தியை மேற்கொள்ளும் முகமாகவே இத் தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (ப- 1)

## யாழ் மாவட்ட விவசாயிகளுக்கு அமெரிக்க அரசு உதவி

யாழ் குடாநாட்டைச் சேர்ந்த பதினையாயிரம் விவசாயிகள் அமெரிக்க அரசின் விவசாய உதவிகளால் நன்மையடைவர்,

550 மெ. தொன் பசளை வகைகள், 2500 கிலோ உப உணவுப் பயிர் விதைகள் ஆகியன அரசசார்பற்ற பொதுஸ்தாபனங்கள் மூலமாக கமக்காரர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

இங்குள்ள உதவி அரசாங்க அதிபர்கள் பிரிவுகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் இயந்திரங்களையும் இவ் உதவத் திட்டத்தின் கீழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (66)

## கிளிநொச்சி மாவட்டத்தில் பல ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்மாதம் ஆசிரிய இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த மாவட்டத்தில் பல பின்தங்கிய பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் அதேவேளை சில நகர்ப்புறப் பாடசாலைகளில் தேவைக்கு அதிகமான ஆசிரியர்கள் கடமை புரிந்து வருகின்றனர்.

தற்போது மேற்கொள்ளப்படவுள்ள இடமாற்றத்தின் போது இந்த விடயங்கள் கவனத்திற்கு எடுக்கப்படும் எனக் கல்வித்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (ப-6)

## தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு தாபரிப்புநிதி மீண்டும் வழங்கப்படுகிறது

நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற சூழ்நிலை காரணமாக கடந்த ஆடி மாதத்தின் பின் தந்தையை இழந்த பிள்ளைகளுக்கு வழங்கப்படாமலிருந்த தபாரிப்பு நிதி வழங்கல் ண்டும் தைமாதம் தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது.

யாழ் மாநகர சனசமூக நிலையங்களின் சமாசத்தால் மேற்படி வழங்கல் வைபவம் யாழ் - புனிதமரியாள் பாடசாலை மண்டபத்தில் நடாத்தப்பட்டது. 33 பிள்ளைகள் இந்த நிதியைப்பெற்றுக் கொண்டார்கள். 1990 ஆவணி - புரட்டாதி ஆகிய இரு மாதங்களுக்குமான கொடுப்பனவுகள் அன்று வழங்கப்பட்டன.

அண்மையில் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக குடும்பத்தலைவனை இழந்த - வறுமைக்கோட்டின் எல்லையில் வாழ்கின்ற- யாழ் மாநகரசபை எல்லைக்குள் வசிக்கின்ற பிள்ளைகள் இந்நிதியைப் பெற தாங்கள் வசிக்கின்ற பகுதிகளிலுள்ள சனசமூக நிலையங்களின் சிதப்புரைகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (47)

---

35ஒய்வுதியக்காரருக்கு பனவு சம்பந்தப்பட்ட கடிதங்கள் அந்தந்த ஓய்வூதியருக்கு கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்டதனால் இவர்கள் இக்கடிதங்களுடன் தினமும் செயலகத்திற்கு வந்து அலைந்து திரிகிறார்கள். (66)

---

தமிழகம்...

எனக் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் சந்திரசேகர் ஆட்சியில் இருக்கும் வரை தி. மு. க மீண்டும் தேர்தலில் பங்குபற்றுவதா இல்லையா என்பது குறித்து ஆராய்வதாக முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி கூறியுள்ளார்.

---

## சைக்கிள் திருடர்கள்: கவனவீனமும் காரணமாகிறது

ஈச்சமோட்டை, பாஷையூர் பகுதிகளில் சைக்கிள் திருட்டுகள் அதிகரித்துள்ளன ஒரே நாளில் மாத்திரம் இரண்டு சைக்கிள்கள் பாஷையூரில் திருடப்பட்டுள்ளன.

சைக்கிள்கள் இவ்விதம் திருட்டுப்போவதற்கு முக்கிய காரணங்கள் சைக்கிள்ச் சொந்தக்காரர் சைக்கிளைப் பூட்டாமல் போவதும், சைக்கிள் பாதுகாப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்த பொழுதிலும் அவற்றைப் பயன்படுத்தாமல் கண்ட கண்ட இடங்களில் சைக்கிள்களை விட்டுச் செல்வதுமே என்றும் கூறப்படுகின்றது. (52-16)

---

தமிழகத்தில்...

பயணிகள் ரயில் பெட்டிகள் சில பயணிகளுடன் தீயிடப்பட்டது இதில் சிலர் தீக்காயங்களுக்குள்ளாகினர் இதே சமயம் சென்னையில் அளவுக்கதிகமான பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர் நேற்று மட்டும் 240 பேர் அங்கு கைதாகியுள்ளனர், நேற்று செய்தியாளர்களிடையே பேசிய தமிழ்நாடு ஆளுநர் சுர்ஜித்சிங் பர்னாலா பொதுச்சொத்துக்களைஅழிக்கவேண்டாம் எனவும் வன்செயல்களை கைவிட வேண்டும் எனவும் தமிழக மக்களை கேட்டுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

---

பட்ட பயிலுநர்...

வித்தியானந்தன் அச்சுவேலி, வீ.விநாயகமூர்த்தி அல்வாய், செல்வி கே. விநாயகமூர்த்தி கொக்குவில், செல்வி ஆர். வசந்தி கரவெட்டி, செல்வி கே. வானதி சாவகச்சேரி, செல்வி சி தயாபரி சுன்னாகம், வீ. யோகதாசன் காரைநகர், ப். யோகராசா கரவெட்டி, செல்வி கே. சண்முகரட்ணம் யாழ்ப்பாணம். (ப-6)

---

இன்று...

மாநில அரசு கலைக்கப்பட்டதா? உத்தரப்பிரதேசத்தில் ஒரு நாளுக்கு ஒரு எம். பி பலியாகிறார் அங்கு சட்டம் ஒழுங்கு நிலவுகிறதா? எனக் கருணாநிதி கேள்வி எழுப்பினார்.

ஆளுநரின் சிபார்சிலேயே மாநில அரசு கலைக்கப்பட முடியும் எனச்சட்டம் கூறுகிறது தமிழக ஆளுநர் பர்னாலா டில்லிக்கு அழைக்கப்பட்டு தமிழகம் குறித்து அறிக்கை கேட்டனர். இதை வழங்க மறுத்த ஆளுநர் உடனேயே சென்னை திரும்பி விட்டார். தொடர்ந்து காரணம் ஏதுமின்றி தமிழக அரசு கலைக்கப்பட்டது என்றார் கருணாநிதி.

---

## புலிகளால் தடை

சாவகச்சேரிப் பகுதியில் இரண்டாம்தர கலப்பட டீசல் விற்பனை விடுதலைப் புலிகளினால் முற்றும் முழுதாக தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

போதைப்...

படுகிறது.

போதை வஸ்துத் தடுப்பு பணியகம் நிறுவப்பட்டதில் இருந்து இதுவே கைப்பற்றப்பட்ட ஆகக் கூடிய தொகையாகும்.

உள்ளூரில் ஒரு கிலோ ஹெரோயின் 5 தொடக்கம் 6 லட்சம் ரூபா வரை விலை போகிறது. (33)

இப்பத்திரிகை முரசொலி பப்பிளிஷேர்ஸ் (பிறைவேட்)லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சு வீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 02-02-1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.